**இலங்கை மின்சார சபை**

**புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தி கிளை**

# வேலைவாய்ப்பு

## சிவில் அத்தியட்சகர் & தொழில்நுட்ப உதவியாளர்
## ஒப்பந்த அடிப்படை (02 வருடங்கள்)

**இலங்கை பிரஜைகளிடமிருந்து மின் சக்தி துறை அல்லது பிற தொழில்துறை கட்டுமான திட்டங்களில் பின்வரும் தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

### 1. சிவில் அத்தியட்சகர் (ஒப்பந்த அடிப்படையில் 02 பதவி வெற்றிடங்கள்)

**கடமைகள்:**

மன்னார் காற்றாலை திட்டத்தின் மூன்றாம் கட்டத்தில் சிவில் கட்டுமான பணிகள் தொடர்புடைய தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்க வேண்டும்.

**தகுதிகள் மற்றும் அனுபவம்:**

- சிவில் பொறியியல் துறையில் பின்வரும் கல்வித் தகைமைகளில் ஏதாவது ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும்

  தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா (NDT), பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா (NDES),

  இலங்கை திறந்த பல்கலைக்கழக தொழில்நுட்ப டிப்ளோமா அல்லது பொறியியலில் உயர்தர தேசிய டிப்ளோமா (HNDE) அல்லது தொடர்புடைய துறையில் 5 ஆண்டுகள் அனுபவத்துடன் தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் (NCT)
- வயது: 18 - 30 வருடங்களுக்கு இடைப்பட்டதாக இருக்க வேண்டும்.
- வீதிகள், காற்றாலை மேம்பாட்டு திட்டங்கள், துணை நிலையங்கள் மற்றும் உயர் மின் அழுத்த கோபுரங்களின் கட்டுமான அனுபவம் கூடுதல் தகுதியாகக் கருதப்படும்.
- ஆங்கிலம் மற்றும் சிங்களம் அல்லது/மற்றும் தமிழ் மொழிகளில் வேலை செய்வதற்கான திறமை இருக்கவேண்டும். தமிழ் மொழியில் பணிபுரியக்கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- மன்னார், அநுராதபுரம், புத்தளம் மாவட்டங்கள் அல்லது வடமாகாணத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

### 2. தொழில்நுட்ப உதவியாளர் (ஒப்பந்த அடிப்படையில் 03 பதவி வெற்றிடங்கள்)

**அடிப்படை தகுதிகள்:**

- ஒரே முயற்சியில் கணிதம் மற்றும் தாய் மொழி உட்பட ஆறு (6) பாடங்களில் க.பொ.த (சா/த) G.C.E.(O/L) தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது தேசிய தொழில்துறை தகுதி நிலை 3 (NVQ-3) அல்லது அதற்கு மேலான தேசிய சான்றிதழை சிவில், மின் அல்லது இயந்திர துறையில் பின்வருமாறு பெற்றிருக்க வேண்டும்.

  தேசிய சான்றிதழ் - மின் பொருத்துநர் (வீட்டு/ தொழிற்சாலை), தேசிய சான்றிதழ் - மின்மோட்டார் சுற்றுநர்,

  தேசிய சான்றிதழ் - நியூமெட்டிக் தொழில்நுட்பவியலாளர், தேசிய சான்றிதழ் - மின் உபகரண தொழில்நுட்பவியலாளர்.
- மேலே குறிப்பிட்ட அனைத்து தகைமைகளும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அமைச்சின் கீழ் இணைக்கப்பட்ட நிறுவனம் மூலம் பெறப்பட்டிருக்க வேண்டும்.
- வயது: 18 - 25 வருடங்களுக்கு இடைப்பட்டதாக இருக்க வேண்டும்.
- ஆங்கிலம் மற்றும் சிங்களம் அல்லது/மற்றும் தமிழ் மொழிகளில் வேலை செய்வதற்கான திறமை இருக்கவேண்டும். தமிழ் மொழியில் பணிபுரியக்கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- மன்னார், அநுராதபுரம், புத்தளம் மாவட்டங்கள் அல்லது வடமாகாணத்தில் வசிப்பவர்களுக்கும்/ தேசிய தொழில்துறை தகுதி நிலை 4 (NVQ-4) தகைமை உடையவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்பிக்க வேண்டிய இறுதிநாள் :** 28.03.2025

**தேர்வு முறை :** நேர்முகத்தேர்வு மூலம்

**சேவை விதிமுறைகள் :**

- 2 ஆண்டுகள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம்.
- பணியிடம்: வடமாகாணம்.
- திட்டப்பணியில் நீண்ட நேரம் பணியாற்ற வேண்டும்.

**ஊதியம்:**

- சிவில் அத்தியட்சகர்: CEB சம்பள அமைப்பின் EL2 - ஆரம்ப நிலை.
- தொழில்நுட்ப உதவியாளர் : CEB சம்பள அமைப்பின் EN5 - ஆரம்ப நிலை.

**பிற சலுகைகள்:**

- EPF: பணியாளர் 10%, நிறுவனம் 15% பங்களிப்பு.
- ETF: நிறுவனத்தின் 3% பங்களிப்பு.

**விண்ணப்பிக்கும் முறை :**

விண்ணப்பங்கள் யாவும் முழு பெயர், தனிப்பட்ட மற்றும் அலுவலக முகவரிகள், தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கங்கள், இரண்டு உறவுமுறையற்ற பரிந்துரையாளர் விவரங்களுடன் முழுமையான சுயவிபரக்கோவையினை (CV) (ஆங்கில மொழியில் நிரப்பப்படவேண்டும்), கடித உறையின் இடது மேல் மூலையில்

"சிவில் அத்தியட்சகர் /தொழில்நுட்ப உதவியாளர் - புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தி கிளை" என குறிப்பிட்டு முடிவுதிகதி அன்று அல்லது அதற்கு முந்தைய திகதியில் கீழே குறிப்பிட்ட முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

பொது சேவைகள் / பொது நிறுவனங்கள் என்பவற்றில் ஏற்கனவே சேவையில் உள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை அவர்களின் நிறுவன தலைவரின் ஊடாக அனுப்பப்படவேண்டும் என்பதுடன் அதில் விண்ணப்பதாரி இக்குறித்த பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவர் சேவையிலிருந்து விடுவிக்கப்படுவாரா என்பதை தெளிவாக குறிப்பிட்டிருக்கவேண்டும்.

**மேலதிக தகவலுக்கு:**

**பிரதி பொது முகாமையாளர் (புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தி கிளை)**
**இலங்கை மின்சார சபை,**
**No. 949/A/1, T.C கார்டன் வீதி,**
**பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்ல.**
**தொலைபேசி: 0112889640**
**தொலைநகல்: 0112869631**

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD